**பத்திரிகைச் செய்தி**

# பெப்பர்ஸ் தொலைக்காட்சியில் புதிய நகைச்சுவை நிகழ்ச்சி !
# டகிள்.காம்

சென்னை, மே 2012

இளைஞர்களை தன்வயமாக்கிக் கொண்டுள்ள தமிழ்ப் பொழுதுபோக்கு அலைவரிசையான **பெப்பர்ஸ் டி.வி.** (Peppers TV), **டகிள்.காம்** (Dougle.com) என்ற புத்தம் புதிய நகைச்சுவை நிகழ்ச்சியை, ஞாயிறுதோறும் காலை 10 மணி முதல் 10.30 மணி வரை ஒளிபரப்பவுள்ளது.

புகழ் பெற்ற நகைச்சுவைக் கலைஞர்களான **திரு. பாலாஜி, திரு. ஷேசு, திரு. மனோகர்** ஆகியோர் இந்நிகழ்ச்சியை இணைந்து வழங்க உள்ளனர். வெறும் ஒரு நகைச்சுவை காட்சியை மட்டும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முன்னிலைப்படுத்தாமல், **நகைச்சுவை தேடுபொறி** (Comedy Search Engine) என்ற அளவுக்கு விரிவும், ஆழமும் கொண்டதாக எல்லா விதமான நகைச்சுவை வடிவங்களும் டகிள்.காம் நிகழ்ச்சியில் இடம் பெறும்.

நையாண்டி, எகத்தாளம், நிகழ்விற்கேற்ற நகைச்சுவை, சிந்திப்பதற்கும், சிரிப்பதற்குமான நகைச்சுவைத் துணுக்குகள், வேடிக்கை பேச்சுகள், விளையாட்டான கொண்டாட்டங்கள் என்று எல்லா விதமான அங்கத சுவைகளையும் ஒருங்கிணைப்பதாக இந்நிகழ்ச்சி இருக்கும்.

அன்றாட வாழ்க்கைச் சூழலில் நடைபெறும் நிகழ்வுகளை மையமாக வைத்து இது தயாரிக்கப்படுகிறது. இதில் யாருடைய உணர்வுகளையும், எண்ணங்களையும் புண்படுத்தாமல், அதே நேரத்தில் நகைச்சுவையோடு நல்ல செய்திகளை காண்போருக்கு வழங்கி அவர்களுடைய நகைச்சுவை தாகத்தைத் தணிக்கக்கூடியதாக இது அமையும்.

இளைஞர்களின் இதயங்களை ஈர்ப்பதற்காக புத்தம் புதிய நிகழ்ச்சிகளை வடிவமைக்கும் துடிப்புள்ள அணுகுமுறையைக் கொண்டதாக பெப்பர்ஸ் டி.வி. செயல்பட்டு வருகிறது. **'சென்னைப் பட்டினம்', 'பாடல் பிறந்த கதை', 'தினம் தினம் தரிசனம்', 'நிழலும், நிஜமும்'** போன்ற பல்வேறு சுவையான நிகழ்ச்சிகள் நேயர்களின் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளன.

தொலைக்காட்சியில் மட்டுமல்லாமல் செல்பேசியிலேயே தொலைக்காட்சி பார்க்கும் வசதி அளித்துள்ள இந்தியாவிலேயே முதல் மண்டல அலைவரிசையாக பெப்பர்ஸ் தொலைக்காட்சி தனி இடம் பெற்றுள்ளது. இந்தத் அலைவரிசையை **http://m.pepperstv.com** என்ற முகவரியில் செல்போன் வழியாகப் பார்த்து மகிழலாம். இது தவிர **www.pepperstv.com** என்ற இணையதளத்திலும் பார்க்கலாம்.

Contact: Peppers TV @ 044 4906 7777